# கல்விக்கதிர்

வடக்கு மாகாணக் கல்வித்திணைக்களத்தினது
உத்தியோகபூர்வ செய்தி மடல்

2019 ஜனவரி

மலர்-5 இதழ் - 1

## தொடரும் சாதனைகள்






மாகாணக் கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்

# முழுநிலா நாள்ப் பதிவுகள்













J/Chavakachcheri Hindu College
28 MAY 2019
Chavakachcheri

# கல்விக்கதிர்

மலர் 5 இதழ் 1 ஜனவரி 2019

## மாகாணக் கல்வித் திணைக்களம்
## வடக்கு மாகாணம்

**தொலைநோக்கு**

*"வடமாகாணத்தின் அனைத்து சிறார்களுக்கும் எதிர்காலச் சவால்களை வெற்றிகொள்ளக் கூடியதான உன்னதமான கல்வி.*

**பணிக்கூற்று**

*தரமான வாழ்க்கைப்பாங்குடன் வாழ்வதற்கான அறிவுமிக்க ஆளுமையுடைய சமுதாயம் உருவாக வழிப்படுத்தல்"*

M1281

**மேற்பார்வையும் வழிகாட்டலும்**
திரு. செ. உதயகுமார்
மாகாணக் கல்விப் பணிப்பாளர்

**ஆலோசனைக்குழு**
திரு.கே. பிரேமகாந்தன்
மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர்

திரு. கி. கமலராஜன்
பிரதிக் கல்விப்பணிப்பாளர்

திரு. க. மணிமாறன்
பிரதிக் கல்விப்பணிப்பாளர்

**இதழாசிரியர்**
திரு. சு. சற்குணராஜா
பிரதிக் கல்விப்பணிப்பாளர்

**உதவி ஆசிரியர்**
திருமதி க. விஜிதா
உதவிக் கல்விப்பணிப்பாளர்





## *தொடரும் சாதனைகள்*

2019 ஆம் ஆண்டின் ஜனவரி மாத வெளியீடான கல்விக்கதிரில் மீண்டும் உங்களுடன் உறவாடுவதையிட்டு மகிழ்ச்சி கொள்கிறோம். 2018 ஜூலை மாதத்தின் பின்னரான மாகாணக் கல்வித் திணைக்களத்தின் சாதனைகள் மற்றும் தகவல்களை உங்களுடன் பகிர்கின்றோம். புலமைப்பரிசில் பரீட்சை நடைபெற்று பெறுபேறுகள் வெளிவந்துள்ளன. 2236 மாணவர்கள் வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்றுள்ளனர். இம்முறை சித்திவீதம் 12.02% ஆகும். கடந்த

ஆண்டை விட 1.09% வீதத்தால் அதிகரிப்பு நிகழ்ந்துள்ளது. இரண்டு வினாத்தாள்களிலும் 35 புள்ளிகள் வீதம் 70 புள்ளிகளுக்கு மேல் எடுத்த மாணவர்கள் தொகை 12.7 வீதத்தால் அதிகரித்துள்ளது.

ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கான "செயற்பட்டு மகிழ்வோம்" தேசியமட்டப் போட்டி கண்டி போஹம்பர மைதானத்தில் நடைபெற்றது வடக்கிலிருந்து கலந்து கொண்ட 72 அணிகளில் பல பதக்கம் பெற்று அணிகள் திரும்பியுள்ளன.

2018ஆம் ஆண்டில் நடைபெற்ற உயர்தரப் பரீட்சைப் பெறுபேற்றின்படி கணிதபாடப் பிரிவில் முதலாமிடத்தையும் உயிரியற் துறையிலும் வணிகத் துறையில் இரண்டாம் இடங்களையும் பெற்றுள்ளோம். கணித உயிரியல் வணிகத்துறையில் சித்தி வீதமானது தேசிய மட்டத்தை விட அதிகரித்த நிலையில் காணப்படுகிறது.

தேசிய மட்டத்திலான ஆங்கிலதினப் போட்டியில் நான்கு தங்கப்பதக்கங்கள் உட்பட 19 பதக்கங்களைப் பெற்றுள்ளோம். தேசிய மட்டத்தில் நடைபெற்ற அழகியல் போட்டியில் 21 தங்கப்பதக்கங்களை வென்றுள்ளோம். இரண்டாம்மொழி சிங்களப்போட்டியில் இரண்டு தங்கப் பதக்கங்களைப் பெற்றுள்ளோம். தேசிய ரீதியில் நடைபெற்ற தகவலறியும் உரிமைச்சட்டம் தொடர்பாக நடைபெற்ற மூன்று போட்டிகளில் இரண்டு போட்டிகளில் தங்கப்பதக்கங்களைப் பெற்று சாதனை படைத்துள்ளோம்.

எமது மாகாணத்தின் சாதனைகளுக்குக் காரணமாக இருந்த அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் போன்றோர் சாதனையாளர் விழாவில் கௌரவிக்கப்பட்டிருக்கிறார்கள். இச் செயற்பாடானது வடக்கு மாகாணத்தின் கல்விச் செயற்பாடுகளுக்கு உத்வேகமாக அமையும் என்பது எமது நம்பிக்கை.

அண்மையில் நிரந்தர நியமனம் பெற்ற தொண்டர் ஆசிரியர்களுக்கு 18 நாட்கள் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. கல்விச் சமூகத்தினராகிய நாம் ஒன்று கூடி எமது மாகாணத்தை முன்னோக்கி நகர்த்திச் செல்லும் வெற்றிப்பயணத்தில் இணைந்து கொள்வோம்.

**இதழாசிரியர்**
**ஆ.சு. சற்குணராஜா**
**பிரதிக்கல்விப்பணிப்பாளர்.**

## மெய்நிகர் பல்கலைக்கழகம் ஏன் தேவை?

*தகவல் தொழில்நுட்பத்தின் பயன்பாடு அதிகரிக்க சமூக வாழ்க்கையின் சகல அம்சங்களும் மாறி வருகின்றன. உலகளாவிய ரீதியில் இணையத்தளம் பயன்படுத்தப் படும்போது, ஆசிரியர்களும் மாணவர்களும் இடம், காலம் என்ற தடைகளைக் கடந்து தொடர்புகொள்ள முடிகின்றது. இதனால் தொடர்கல்விக்கான சந்தர்ப்பங்கள், அறிவையும் அனுபவங்களையும் பகிர்ந்துகொள்ளும் வாய்ப்புகள், புதிய திறன்களைக் கற்கும் வாய்ப்புகள் கிட்டுகின்றன.*

# பாடசாலையின் முகாமைத்துவம் சார் செயற்பாடுகளில் தகவல் தொடர்பாடல் தொழிநுட்பத்தின் பங்களிப்பு (அனுபவப் பகிர்வு)



அனைத்துத் துறைகளிலும் தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் பாரிய பங்காற்றி வரும் இன்றைய காலகட்டத்தில் கடந்த காலங்களுடன் ஒப்பிடுகையில் பாடசாலையின் கற்றல், கற்பித்தல் மற்றும் முகாமைத்துவ செயற்பாடுகளை இலகுவாக்குவதற்கும் வினைத்திறனாக முன்னெடுத்துச் செல்வதற்கு இலகுவாகவும் பாடசாலைகளில் இலத்திரனியல் பாடசாலை மணி (Digital School Bell), நேரசூசி தயாரிக்கும் மென்பொருள் (Time Table Software), விரல் அடையாள அலகிடலி (Finger Print Scanner), ஆசிரியர் தரவுத்தளம்(Teacher Database), மாணவர் தரவுத்தளம்(Student Database), திறன் வகுப்பறைகள் (Smart Classrooms), கணினி ஆய்வுகூடங்கள் (Computer Labs) போன்றன பயன்பாட்டில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

அந்த வகையில் பாடசாலையின் கல்வி, முகாமைத்துவம் சார் செயற்பாடுகளில் தகவல் தொடர்பாடல் தொழினுட்பத்தின் வகிபாகம் குறித்த எமது அனுபவத்தினை யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரியின் தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப ஆசிரியராக உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் மகிழ்வடைகின்றேன்.

எமது பாடசாலையானது தென்மராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட 1AB பாடசாலையாகும். இங்கு 515 மாணவர்கள் கல்வி கற்பதுடன் 40 ஆசிரியர்களும் கல்வி கற்பிக்கின்றனர். இப்பாடசாலையில் தகவல் தொடர்பாடல் ஆசிரியர்கள் இருவர் உள்ளோம். நாம் கற்பித்தல் செயற்பாட்டுடன் பின்வரும் செயற்பாடுகளையும் செயற்படுத்தி வருகின்றோம்.

**வடக்கு மாகாணத்தின் கல்வி முகாமைத்துவ தகவல் முறைமை**
(Education Management Information System, Northern Province - EMIS - NP)



வடக்கு மாகாணத்தின் கல்வி முகாமைத்துவ தகவல் முறைமையில் எமது கல்லூரி மாணவர்களின் விபரங்களை பதிவேற்றும் செயற்பாட்டினை 2015ம் ஆண்டு ஆரம்பித்திருந்தோம். படிப்படியாக மேற்கொள்ளப்பட்ட இப்பதிவேற்ற செயன்முறையில் ஆரம்ப கட்டத்தில் பல சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. மாணவர்களின் அடையாள இலக்கத்தை முதன்மைச்சாவியாக (Primary Key) கொண்டு உருவாக்கப்பட்ட இத்தரவுத்தளத்தில் தவறுதலாக பிழையாக பதியப்பட்டு சேமிக்கப்பட்ட மாணவர் அடையாள இலக்கங்களில் மாற்றம் செய்வதற்கான அனுமதி எமக்கு வழங்கப்படவில்லை. அத்துடன் வேறு பாடசாலைகளில் கல்வி கற்று எமது பாடசாலைக்கு மாற்றலாகி வரும் மாணவர்களின் விபரங்களை எமது பாடசாலை மாணவர் விபரங்களுடன் இணைத்துக் கொள்வதற்கான அனுமதியும் வழங்கப்படவில்லை. இந்நிலையில் கோட்டக்கல்வி அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு தரவுத்தளத்தில் மாற்றங்களை மேற்கொண்டோம். இருப்பினும் மாணவர்களின் தவறான அடையாள இலக்கங்கள், புதிய மாணவர்களின் வருகை, மாணவர்கள் வேறு பாடசாலைகளுக்கு மாற்றலாகிச் செல்லல், மாணவர்கள் பொதுப்பரீட்சைகளில் சித்தியடையத் தவறுதல் போன்ற காரணங்களால் தரவுத்தளத்தின் செம்மைத்தன்மையை தொடர்ச்சியாகப் பேண வேண்டிய தேவை ஏற்பட்டது. இந்நிலையில் கடந்த வருடம் ஆவணி மாதம் பாடசாலை விடுமுறையின் போது வடக்கு மாகாணத்தின் கல்வி முகாமைத்துவ தகவல் முறைமையினை சீர் செய்யும் பணிகள் வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தில் இடம்பெற்றன. இச் செயற்திட்டத்தில் நாமும் இணைந்து கொண்டு எமது கல்லூரியில் கல்வி பயிலும் மாணவர்களின் விபரங்களை சரியான மாணவர் அடையாள இலக்கத்துடன் (சேர்வு இடாப்புடன் சரிபார்க்கப்பட்டு) ஒழுங்குபடுத்தினோம். அத்துடன் பாடசாலையின் அடிப்படை தகவல்கள், மாணவர்களின் அடிப்படை தகவல்கள், மாணவர் எண்ணிக்கைகள் (பாட ரீதியாக, பால் ரீதியாக, சமய ரீதியாக, துறை ரீதியாக), பாடசாலையின் பௌதிக வளங்கள் தொடர்பான விபரங்கள் மற்றும் நிதி சார்ந்த தகவல்களையும் இற்றைப்படுத்தினோம்(update). அத்துடன் தொடர்ச்சியாகத் தரவுத்தளத்தில் மாணவர்களின் தவணைப்பரீட்சைப் புள்ளிகளையும், பொதுப்பரீட்சைப் பெறுபேறுகளையும் உடனுக்குடன் பதிவேற்றம் செய்து வருகின்றோம். இதன்மூலம் மாணவர்களின் அடைவுகளை பாடசாலைமட்ட (கணிப்பீட்டுப்புள்ளிகள், தவணைப்பரீட்சைப் புள்ளிகள்), பொதுப்பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் மதிப்பீடு செய்ய முடிவதுடன் தவணைப்பரீட்சை புள்ளிகள் பதிவேற்றம் செய்யப்பட்ட பின்னர் மாணவர் தேர்ச்சி அறிக்கைகளை (Students Progress Reports) அச்சிட்டு வழங்கக்கூடிய வசதியையும் பெற்றுக்கொள்கின்றோம்.

மேலும் பொதுப்பரீட்சைப் பெறுபேறுகளின் பாட ரீதியான, துறை ரீதியான பகுப்பாய்வுகளையும் தவணைப்பரீட்சைப் புள்ளிகளின் பகுப்பாய்வுகளையும், புள்ளிப் பதிவேடுகளையும் பெற்றுக்கொள்ளவும் பாட ரீதியாக 40 புள்ளிகளுக்குக் குறைவாகப் பெற்ற மாணவர்களை எளிதில் இனங்கண்டு மேலதிக செயற்பாடுகளை மேற்கொள்ளவும் இத்தரவுத்தளம் எமக்கு உதவி புரிகின்றது.

அது மட்டுமன்றி இத்தரவுத்தளத்தினை செம்மையாக்கிய பின்பு பாடசாலையில் கல்வி பயிலும் அனைத்து மாணவர்களின் விபரங்களையும் முகாமைத்துவம் சார் வேறு தேவைகளில் பயன்படுத்துவதும் இலகுவாகக் காணப்படுகின்றது(சுரக்ஷா

மாணவர் காப்புறுதித்திட்டம், இலவச பாடநூல் விநியோகம், இலவச சீருடை விநியோகம், வசதிக்கட்டணம் மற்றும் பிற தேவைகள்).

எமது கல்லூரியில் இத்தரவுத் தளமானது மிகத் திருத்தமாகப் பேணப்பட்டு வரும் நிலையில் இதனைப் பராமரித்தலும் சுலபமாகக் காணப்படுகின்றது. இத்தரவுத்தளத்திற்குப் பொறுப்பாக நியமிக்கப்படும் ஆசிரியருக்கு 10 பாடவேளைகள் ஒதுக்கப்படுவதால் தரவுத்தளத்தினைப் பராமரிக்கும் செயற்பாட்டினை இக்காலப் பகுதியினுள்ளேயே மேற்கொள்ள முடிகின்றது. தரம் 1 இல் புதிதாக அனுமதி பெறும் மாணவர்கள் தவிர்ந்த வடக்கு மாகாணத்தில் கல்வி பயிலும் அனைத்து மாணவர்களின் விபரங்களும் இத் தரவுத்தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதால் எமது பாடசாலையில் தரம் 6 இல் மாணவர்களை புதிதாக இணைத்துக் கொள்ளும்போது அவர்கள் ஏற்கனவே கல்வி கற்ற பாடசாலையிலிருந்து எமது பாடசாலைக்கு அவர்களது விபரங்களை மாற்ற வேண்டிய தேவை மாத்திரமே தற்போது காணப்படுகின்றது.

எமது அனுபவத்தில், வடக்கு மாகாணத்தின் கல்வி முகாமைத்துவ தகவல் முறைமையானது கல்லூரியின் முகாமைத்துவம் சார் செயற்பாடுகளில் பெரிதும் பங்களிக்கின்றது என்பதை மகிழ்ச்சியுடன் கூறி நிற்கின்றோம்.

**பேண்தகு பாடசாலை நிகழ்ச்சித்திட்டம்** (Sustainable School Programme)

பேண்தகு யுகம் என்னும் தொலை நோக்கை பாடசாலைப் பிள்ளை களுக்கிடையில் மேம்படுத்தும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட பேண்தகு பாடசாலைச் சமூகத்தை ஸ்தாபிக்கும் நிகழ்ச்சித் திட்டமானது "அழகிய சிறுவர் உலகம் - பேணிப்பாதுகாக்கப்பட்ட எதிர்காலம்" எனும் தொனிப்பொருளின் கீழ் எமது கல்லூரி மாணவர்களுக்கும் வழங்கப்பட்டு வருகிறது. மேன்மைதங்கிய ஜனாதிபதி அவர்களின் மேற்பார்வை மற்றும் வழிகாட்டலின்கீழ் பின்வரும் 5 விடயங்கள் ஊடாக தேசிய நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளன. அவையாவன உணவு உற்பத்தி தேசிய நிகழ்ச்சித்திட்டம், சுற்றாடல் பாதுகாப்பு தேசிய நிகழ்ச்சித்திட்டம், போதைப்பொருள் தடுப்பு தேசிய நிகழ்ச்சித்திட்டம், சிறுநீரக நோய்த்தடுப்பு தேசிய நிகழ்ச்சித்திட்டம், மற்றும் பிள்ளைகளைப் பாதுகாப்போம் தேசிய நிகழ்ச்சித்திட்டம் என்பனவாகும். மேற்படி நிகழ்ச்சித்திட்டங்கள் எமது பாடசாலையில் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டு வருவதுடன் செயற்படுத்தப்படும் அனைத்து நிகழ்ச்சித்திட்டங்களும் எமது கல்லூரிக்கென ஒதுக்கப்பட்டுள்ள பேண்தகு நிகழ்ச்சித்திட்ட வலைத்தளத்தில் உடனுக்குடன் முன்னிலைப் படுத்தும் செயற் பாடுகள் எம்மால் மேற் கொள்ளப்படுகின்றன.

அத்துடன் மேற்படி பிள்ளைகளைப் பாதுகாப்போம் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் எமது கல்லூரியில் கல்வி பயிலும் தரம் 6 - 13 வரையான மாணவர்களுக்கு தகவல் தொடர்பாடல் தொழிநுட்பத்தை சரியான முறையில் பயன்படுத்துவது எவ்வாறு? என்பது பற்றிய வழிகாட்டல்கள் வழங்கப்பட்டுள்ளதுடன் பாடசாலை மட்டத்தில் பாதுகாப்பான இணையப் பாவனையை மாணவர்கள் மேற்கொள்ள பாடசாலை மட்டத்தில் கணினி அவசர தயார்நிலை படையணியையும் உருவாக்கி செயற்படுத்தி வருகின்றோம்.

**திறன் வகுப்பறை** (Smart Classroom)

பாடசாலைகளில் திறன் வகுப்பறை அமைக்கும் செயற்றிட்டத்தின் கீழ் கல்வி அமைச்சினால் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் எமது பாடசாலையும் ஒன்றாகும். அந்த வகையில் கடந்த

22.06.2017 அன்று எமது பாடசாலையின் திறன் வகுப்பறை தென்மராட்சி கல்வி வலயக்கல்விப் பணிப்பாளர் உயர்திரு.கூ.கிருஸ்ணகுமார் அவர்களால் திறந்துவைக்கப்பட்டது. தொடர்ந்து திறன் வகுப்பறையை எவ்வாறு பயன்படுத்துவது என்பது பற்றிய செயன்முறை ரீதியான விளக்கத்தை எமது பாடசாலையில் கல்வி கற்பிக்கும் அனைத்து ஆசிரியர்களுக்கும் நாம் வழங்கியிருந்தோம். நவீன கற்பித்தல் உபகரணங்களுடன் கூடிய இத்திறன் வகுப்பறையானது எமது பாடசாலையில் தொடர்ந்தும் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

அத்துடன் எமது பாடசாலையில் கல்வி கற்று பல்கலைக்கழகம் மற்றும் தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு தகுதி பெறும் அனைத்து மாணவர்களினதும் அனுமதிக்கான இணையத்தளம் மூலமான விண்ணப்பத்தினை பூரணப்படுத்தி வழங்குதல், நேரசூசி தயாரித்தல், கணினியில் சொத்து மதிப்பீடு, பொருட்கணக்கெடுப்பனவு தகவல்கள் பேணல், மாணவர்களின் நடத்தைச் சான்றிதழ்கள் தட்டச்சிடல் மற்றும் பாடசாலையில் நடைபெறும் அனைத்து விழாக்களின் போதான அழைப்பிதழ்கள், Batch தயாரித்தல் போன்ற செயற்பாடுகளிலும் எமது ஒத்துழைப்பை நல்கி வருகின்றோம். அத்துடன் கற்பித்தல் செயற்பாடுகளுக்காக மஹிந்தோதய ஆய்வுகூடத்தினை முறையான பதிவேடுகளுடன் கவின் நிலையிலும் பேணி வருகின்றோம்.

கடந்த வருடம் British Council இனால் நடாத்தப்பட்ட சர்வதேச பாடசாலைகளுக்கிடையிலான விருது வழங்கும் செயற்றிட்டத்தில் எமது பாடசாலையும் இணைந்து கொண்டு முழு விருது பெற்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும். இச் செயற்றிட்டத்தில் தகவல் தொடர்பாடல் தொழினுட்ப இணைப்பாளராக எமது பங்களிப்பினை நல்கியிருந்தோம்.

எதிர்காலத்தில் கல்லூரியின் வளர்ச்சியை உலகெங்கிலும் உள்ள கல்லூரியின் பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் நோக்கும் பொருட்டு கல்லூரிக்கென வலைத்தளத்தை உருவாக்க உத்தேசித்துள்ளோம்.

கற்பித்தல் மற்றும் இணைபாடவிதான செயற்பாடுகளுடன் பாடசாலையின் முகாமைத்துவம்சார்தகவல்தொடர்பாடல் தொழினுட்ப தேவைப்பாடுகளை நிறைவேற்றுவது பெரும் சவாலுக்குரிய விடயமெனினும் பாடசாலையின் வினைத்திறனான முகாமைத்துவத்திற்கு எமது பங்களிப்பினை மகிழ்வுடன் வழங்கி வருகின்றோம்.

செல்வி.ம.ஆன் தர்க்ஷிகா
MSc. in Computer Science
ஆசிரியர்
யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி

# வடக்கு மாகாணக் கல்வியின் தற்கால போக்கு


வடக்கு மாகாணக் கல்வி நிலை வீழ்ச்சி அடைந்துள்ளதாகவும் ஆசிரியப் பரம்பல் சீரற்றதாகக் காணப்படுவதாகவும் மற்றும் பல குற்றச்சாட்டுக்களை எந்தவிதமான ஆய்வுகளும் ஆதாரங்களும் இன்றி எழுந்தமானமாக பலதரப்பட்ட தரப்புக்களும் சுமத்தி வருவதுடன் அதனை பொதுவெளியில் பிரச்சாரம் செய்து அர்ப்பணிப்புடன் சேவையாற்றுகின்ற ஆசிரியர்கள், அதிபர்கள் உள்ளிட்ட கல்விச் சமூகத்தின் சேவையினையும் ஒட்டுமொத்தமாக இழிவுபடுத்துகின்ற செயற்பாடகவும் இதனைக் கருத்தில் கொள்ளவேண்டிய தேவை காணப்படுவதுடன் வடக்கு மாகாணக் கல்வியின் இன்றைய நிலை தொடர்பிலான உண்மையான நிலவரத்தினை ஆய்வு ரீதியாக, ஆக்கபூர்வமான விமர்சன ரீதியாக வெளிக்கொணர வேண்டியது காலத்தின் கட்டாயமாகக் காணப்படுகின்றது.


சகல பொதுப் பரீட்சைகளினதும் கடந்தகாலப் பெறுபேறுகள் மற்றும் தேசிய, சர்வதேச போட்டிகளில் மாணவர்கள் பெற்றுக்கொண்ட வெற்றிகள் என்பவற்றினை பகுப்பாய்வு செய்வதன் ஊடாகவே வடக்கு மாகாணத்தின் கல்வி நிலை மற்றும் அதன் போக்கு என்பனவற்றினை வரையறுத்துக் கொள்ளலாம்.

**தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை**


தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையின் பெறுபேறுகளில் இரண்டு வினாத்தாள்களிலும் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்களது எண்ணிக்கையானது 2017ம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2018ம் ஆண்டில் 12.70 வீதம் அதிகரித்து காணப்படுவதுடன் மாகாணத்திலுள்ள அனைத்து கல்வி வலயங்களினதும் பெறுபேறுகள் அதிகரித்ததன்மையினையே காட்டுகின்றது.

**புலமைப் பரிசில் பரீட்சையில் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்று சித்தி அடைந்தவர்களின் வீதம் கடந்த 7 ஆண்டுகளின் ஒப்பீடு - வடக்கு மாகாணம்.**






தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் உதவிப்பணம் பெறுவதற்கும் பாடசாலைகளை தேர்வு செய்வதற்குமான வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்ற மாணவர்களின் வீதம் உயர்வாகவே காணப்படுகின்றது.





**க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை**


க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் கடந்த 2013ம் ஆண்டு தொடக்கம் 2017ம் ஆண்டு வரையிலான தரவுகளைப் பகுப்பாய்வு செய்கையில் அண்மைய வருடங்களில் தொடர்ச்சியான அதிகரிப்பினையே காணக்கூடியதாக உள்ளது.



க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் கடந்த 2016 மற்றும் 2017 ஆம் வருடங்களை வலய ரீதியாக ஒப்பீடு செய்கையில் அனைத்து வலயங்களினதும் பெறுபேறுகள் அதிகரித்த நிலைமையே காணப்படுகின்றது. வலயங்களின் 2017ம் ஆண்டினது க.பொ.த. சாதாரண தரப்பரீட்சையில் சித்தி வீதங்களின் அதிகரிப்பு வீதமானது கூடியதாக காணப்படுவது சிறப்பம்சமாகும்.





தேசிய மட்டத்துடன் ஒப்பீடு செய்கையில் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையின் சித்தி வீத அதிகரிப்பானது தேசிய மட்டத்தினை விட அதிகமானதாகவே வடக்கு மாகாணத்தில் காணப்படுகின்றது.



## க.பொ.த. உயர்தரப் பரீட்சை

க.பொ.த. உயர்தரப் பெறுபேறுகளைப் பொறுத்தவரையில் எமது மாகாணத்தின் நிலை மிக நன்றாகக் காணப்படுவதுடன் அகில இலங்கை ரீதியில் முதலிடத்தில் இருப்பது சிறப்பிற்குரியதாகும். கடந்த வருடங்களில் பெறுபேற்றினை பாடத்துறைகள் ரீதியாக நோக்குகையில் அனைத்து பாடத்துறைகளிலும் சித்திவீதங்கள் அதிகரித்துள்ளமையினையே காட்டுகின்றது.




அண்மைய ஆண்டுகளில் ஒவ்வொரு பாடத்துறை ரீதியாக பல்கலைகழகத்திற்கு விண்ணப்பிப்பதற்கு தகுதி பெற்ற வடக்கு மாகாண மாணவர்களின் வீதம் மற்றும் தேசிய வீதத்துடனான ஒப்பீடு வருமாறு.

| பாடத்துறை | 2013 | | 2014 | | 2015 | | 2016 | | 2017 | | 2018 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வடக்கு | தேசிய | வடக்கு | தேசிய | வடக்கு | தேசிய | வடக்கு | தேசிய | வடக்கு | தேசிய | வடக்கு | தேசிய |
| உயிரியல் | 47 | 50 | 56 | 50 | 56 | 52 | 58 | 53 | 59 | 56 | 60 | 58 |
| கணிதம் | 45 | 47 | 49 | 47 | 54 | 48 | 60 | 53 | 59 | 54 | 63 | 57 |
| வணிகம் | 55 | 58 | 62 | 64 | 70 | 70 | 70 | 70 | 73 | 71 | 71 | 69 |
| கலை | 76 | 66 | 72 | 69 | 71 | 69 | 69 | 70 | 76 | 74 | 69 | 69 |
| பொறியியல் தொழில்நுட்பம் | - | - | - | - | 55 | 50 | 54 | 56 | 59 | 58 | 51 | 58 |
| உயிரியல் தொழில்நுட்பம் | - | - | - | - | 60 | 61 | 59 | 60 | 65 | 62 | 62 | 64 |

| 2018ம் ஆண்டு க.பொ.த. உயர்தரப் பெறுபேறுகளின் படி பல்கலைக்கழகத்துக்கு தகுதி பெற்ற மாணவர்களின் வீதத்தின் அடிப்படையில் வடக்கு மாகாணம் ஒவ்வொரு பாடத்துறையிலும் அகில இலங்கை ரீதியாக பெற்றுக்கொண்ட நிலை | |
|---|---|
| கணிதத்துறை | 1 |
| உயிரியல் துறை | 2 |
| வணிகத்துறை | 2 |

| | |
|---|---|
| கலை | 5 |
| பொறியியல் தொழில்நுட்பம் | 8 |
| உயிரியல் தொழில்நுட்பம் | 6 |

2018 க.பொ.த. உயர்தரப் பெறுபேறுகளைப் பொறுத்தவரையில் உயிரியல், கணிதம் மற்றும் வணிகப்பாடத்துறைகளில் சித்தி வீதமானது தேசிய மட்டத்தினை விட அதிகரித்த நிலையில் காணப்படுகிறது. அத்துடன் கலைத்துறையினது சித்தி வீதம் தேசிய மட்டத்துக்கு சமனானதாக காணப்படுவதுடன் பொறியியல் தொழில்நுட்பம் மற்றும் உயிரியல் தொழில்நுட்பம் ஆகிய பாடத்துறைகளின் சித்தி வீதம் தேசிய மட்டத்துடன் ஒப்பீடு செய்கையில் குறைவாகவே காணப்படுகின்றது.

**தேசிய மட்டப்போட்டிகளில் வடக்கு மாகாணத்தின் சாதனைகள்.**

வடக்கு மாகாண மாணவர்கள் தங்களது பாடசாலை மற்றும் கல்விச் சமூகத்தின் ஊக்குவிப்புக்கள் வழிகாட்டல்களுடன் பல்வேறுபட்ட தேசிய மற்றும் சர்வதேசப் போட்டிகளில் பங்குபற்றுவதுடன் வெற்றிகளையும் பெற்று இருக்கிறார்கள். தேசிய மட்ட தமிழ்த்தினப் போட்டியில் ஒரு மாகாணத்தினால் அதிகபட்சம் பெறக்கூடிய 50 பதக்கங்களில் 36 பதக்கங்களைத் தம்வசமாக்கி எமது மாகாண மாணவர்கள் சாதனை புரிந்துள்ளனர். அத்துடன் தேசிய மட்ட விளையாட்டுப் போட்டிகளில் குழு விளையாட்டுகளில் 10 முதலாம் இடத்தினையும் 04 இரண்டாம் இடத்தினையும் 06 மூன்றாம் இடத்தினையும் பெற்றுக்கொண்டனர். அந்த வகையில் போட்டிகளில் எமது மாணவர்கள் நிலைநாட்டிய சாதனைகளின் விபரங்களை அட்டவணையில் காணலாம்.

| தேசிய மட்டப் போட்டிகள் - 2018 | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
|---|---|---|---|
| தமிழ்த்தினப் போட்டி | 26 | 05 | 05 |
| ஆங்கிலதினப் போட்டி | 04 | 06 | 09 |
| விளையாட்டு | 11 | 20 | 19 |
| அழகியல் | 21 | 10 | 03 |
| சமூக விஞ்ஞானப் போட்டி – 2017* | 18 | 16 | 33 |
| தகவல் அறியும் உரிமைச் சட்டம் | 02 | - | - |
| மீலாத் | - | 2 | 2 |
| இரண்டாம் மொழி – சிங்களம் | 02 | - | - |
| இரண்டாம் மொழி – தமிழ் | - | 01 | - |
| *சமூக விஞ்ஞானப் போட்டி 2018 இன் முடிவுகள் இதுவரையில் வெளியிடப்படவில்லை | | | |

**ஒலிம்பியாட் போட்டிகள்**

கணித விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டிகளில் எமது மாகாண மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள் மற்றும் குறித்த பாடத்துறைக்கு பொறுப்பான கல்விப் பணிப்பாளர்களின் உற்சாகமான வழிகாட்டல்களுடன் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் கலந்து கொண்டுள்ளனர். அந்த வகையில் 2018இல் விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டிகளில் தேசிய குழாமிற்கு 06 மாணவர்களும் சர்வதேச குழாமிற்கு ஒரு மாணவரும் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் கணித ஒலிம்பியாட் போட்டிகளில் தேசிய குழாமிற்கு 44 மாணவர்களும் சர்வதேச குழாமிற்கு ஒரு மாணவரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்

**வடக்கு மாகாணத்தின் ஆசிரியர் பரம்பல்**

கல்வி வலயங்கள் 12 இணைக் கொண்டமைந்த வடக்கு மாகாணத்தில் ஆசிரிய பரம்பலை சீரமைக்கின்ற பாரிய சவாலான பணியினை வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களம் வினைத்திறனாக ஆற்றி வருவதுடன் மாகாணப் பாடசாலைக்கென அனுமதிக்கப்பட்ட மொத்த ஆசிரிய ஆளணி 18438 காணப்படுவதுடன் இன்றைய திகதியில் 16220 ஆசிரியர்கள் பணியாற்றுவதுடன் மொத்தமாக 2218 ஆசிரிய ஆளணி வெற்றிடமாகவே காணப்படுகின்றது.

பாட ரீதியாக ஆசிரிய ஆளணியினை பகுப்பாய்வு செய்கையில், சங்கீதம், நடனம், நாடகமும் அரங்கியலும் பாடங்களிலும் சமயப் பாடங்களிலும் மேலதிக ஆசிரியர்கள் காணப்படுவதுடன் ஆரம்பக் கல்வி, ஆரம்பக் கல்விக்கான ஆங்கிலம் இடைநிலை பிரிவு விஞ்ஞானம், கணிதம், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் மற்றும் ஆய்வுகூட முகாமைத்துவம், இரண்டாம்மொழி சிங்களம், விவசாயமும் உணவுத் தொழில்நுட்பமும், மனைப்பொருளியல், சுகாதாரமும் உடற்கல்வியும், வழிகாட்டல் ஆலோசனை மற்றும் விசேட கல்வி போன்ற பாடங்களுக்கு ஆசிரிய ஆளணி வெற்றிடம் காணப்படுகின்றது.

வெற்றிடமாக காணப்படுகின்ற அநேகமான பாடங்களுக்கு பல முறை விண்ணப்பங்கள் கோரப்பட்டும் உரிய தகமையுடைய பட்டதாரிகள் வடக்கு மாகாணத்தில் பற்றாக்குறையாகக் காணப்படுவதால் குறித்த வெற்றிடங்களை பூரணமாக நிரப்ப முடியாதுள்ளதுடன் டிப்ளோமா தகமையுடையவர்களை நியமிக்கின்ற அதிகாரமுடைய மத்திய கல்வி அமைச்சுக்கும் மேற்படி வெற்றிட விபரங்கள் காலத்துக்கு காலம் அறிக்கையிடப்படுகின்றது.

கல்வியியற் கல்லூரி டிப்ளோமாதாரிகளை வெற்றிடமுள்ள இடங்களுக்கு நியமிப்பதற்காக அதிகளவானவர்களை வடக்கு மாகாணத்திற்கு விடுவிக்குமாறும் கோரிக்கை விடப்பட்டுள்ளது. இந் நிலையில் 13 வருட உத்தரவாதக் கல்வி செயற்றிட்டத்திற்கான ஆசிரிய நியமனங்களில் உரிய தகமைகளையுடைய தமிழ்மொழி விண்ணப்பதாரிகள் பற்றாக்குறையாக இருந்தமையினால் குறித்த பாடங்களுக்கும் ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன. வடக்கு மாகாணத்திற்குட்பட்ட 12 கல்வி வலயங்களிலும் காணப்படுகின்ற தற்போதைய ஆசிரியர் பரம்பல் கீழ்வருமாறு அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது.

**வடக்கு மாகாணத்தின் தற்போதைய ஆசிரிய ஆளணி - வலய ரீதியாக**

| வலயம் | அனுமதிக்கப்பட்டது | தற்போதுள்ளது | வெற்றிடம் |
|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 2404 | 2235 | 169 |
| வலிகாமம் | 2681 | 2408 | 273 |
| வடமராட்சி | 1661 | 1617 | 44 |
| தென்மராட்சி | 1095 | 972 | 123 |
| தீவகம் | 998 | 825 | 173 |
| கிளிநொச்சி | 2294 | 2069 | 225 |
| மன்னார் | 1555 | 1250 | 305 |
| மடு | 703 | 550 | 153 |

| | | | |
|---|---|---|---|
| வவுனியா வடக்கு | 1071 | 808 | 263 |
| வவுனியா தெற்கு | 1699 | 1646 | 53 |
| முல்லைத்தீவு | 1403 | 1245 | 158 |
| துணுக்காய் | 874 | 595 | 279 |
| மாகாணம் | 18438 | 16220 | 2218 |

**Source: http://www.edudept.np.gov.lk/sqlteachercadreSubwiseZoneWithADEISA.php - Accessed on 04.01.2019**

வலயங்களுக்கிடையிலான ஆசிரியர் மாணவர் எண்ணிக்கை மற்றும் ஒரு ஆசிரியருக்கான மாணவர் வீதம் என்பனவற்றினை பகுப்பாய்வு செய்தே ஆசிரியர் பரம்பலானது மேற்கொள்ளப்பட வேண்டிய நியாயமான காரணங்களும் கருத்தில் கொள்ளப்படவேண்டியதாக காணப்படுகின்ற நிலையில் கீழ்வரும் அட்டவணையானது வலயங்களுக்கிடையேயான மாகாணப் பாடசாலை மாணவர் ஆசிரியர் எண்ணிக்கை மற்றும் விகிதாசாரம் தொடர்பான தரவினைக் கொண்டுள்ளது.

**ஆசிரியர், மாணவர் எண்ணிக்கை, விகிதாசாரம் - வலய ரீதியாக**

| வலயம் | ஆசிரியர் தொகை | மாணவர் தொகை | ஒரு ஆசிரியருக்கான மாணவர் தொகை |
|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 2235 | 28309 | 13 |
| வலிகாமம் | 2408 | 32256 | 13 |
| வடமராட்சி | 1617 | 19818 | 12 |
| தென்மராட்சி | 972 | 9916 | 10 |
| தீவகம் | 825 | 8348 | 10 |
| கிளிநொச்சி | 2069 | 29437 | 14 |
| மன்னார் | 1250 | 17555 | 14 |
| மடு | 550 | 6194 | 11 |
| வவுனியா வடக்கு | 808 | 7777 | 10 |
| வவுனியா தெற்கு | 1646 | 22126 | 13 |
| முல்லைத்தீவு | 1245 | 17755 | 14 |
| துணுக்காய் | 595 | 7742 | 13 |
| மாகாணம் | 16220 | 207233 | 13 |

**Source: http://www.edudept.np.gov.lk/zoneschdata.php - Accessed on 04.01.2019**

ஆசிரியர் பரம்பலினை ஆய்வு செய்கையில் ஆசிரியர்களது வயது ரீதியாகவும் பால் ரீதியாகவும் பகுப்பாய்வு மிகவும் முக்கியமானதாகும். வடக்கு மாகாணத்தில் ஆசிரிய ஆளணியில் ஏறக்குறைய 75% பெண் ஆசிரியர்களாக இருப்பதுடன் தற்போதுள்ள ஆசிரியர்களில் 46 வயதுக்கு மேற்பட்டவர்களை மாவட்ட ரீதியாக பிரித்துப்பார்க்கையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்போதுள்ள ஆசிரிய ஆளணியில் 46.32 வீதமானவர்கள் 46 வயதுக்கு மேற்பட்டவர்களாக காணப்படுவதுடன் பிற மாவட்டங்களில் காணப்படும் வயது ரீதியான பகுப்பாய்வு கீழ்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

| வயதடிப்படையில் ஆசிரியப் பரம்பல் - மாவட்ட ரீதியாக | | | |
|---|---|---|---|
| மாவட்டம் | ஆசிரியர் தொகை | 46 வயதுக்கு மேற்பட்டோர் தொகை | % |
| யாழ்ப்பாணம் | 8057 | 3732 | 46.32 |
| கிளிநொச்சி | 2069 | 463 | 22.38 |
| மன்னார் | 1800 | 579 | 32.17 |
| வவுனியா | 2454 | 842 | 34.31 |
| முல்லைத்தீவு | 1840 | 420 | 22.83 |

Source:https://www.nemis.moe.gov.lk - Accessed on 04.01.2019

**வடக்கு மாகாணத்தின் குடித்தொகையும் பல்கலைக்கழக அனுமதியும்.**

வடக்கு மாகாண மாணவர்களது பல்கலைக்கழக வாய்ப்புக்கள் தொடர்பாக விமர்சன ரீதியாக ஆய்வு செய்கையில் வடக்கு மாகாணக் குடித்தொகை மற்றும் அதனது வளர்ச்சி என்பவற்றினை நோக்குதல் வேண்டும் என்பதுடன், மற்றைய மாகாணங்களின் குடித்தொகை வளர்ச்சியினை விட எமது மாகாணத்தின் வளர்ச்சி குறைவாக காணப்படுவதுடன் யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் மாவட்டங்களின் குடித்தொகையானது சடுதியான வீழ்ச்சியை வெளிக்காட்டுவதுடன் இவ் வீழ்ச்சியானது கோட்டா அடிப்படையிலான பல்கலைக்கழக அனுமதி எண்ணிக்கையில் நேரடியாக தாக்கத்தினைச் செலுத்தும் காரணியாகக் காணப்படுகின்றது.

| வடக்கு மாகாணத்தின் சனத்தொகை மற்றும் சனத்தொகை வளர்ச்சி வீதம் | | | |
|---|---|---|---|
| மாவட்டம் | 1981 | 2012 | வளர்ச்சி வீதம் |
| யாழ்ப்பாணம் | 734734 | 583071 | -0.74 |
| கிளிநொச்சி | 90778 | 112872 | 0.70 |
| மன்னார் | 105276 | 99063 | -0.20 |
| வவுனியா | 93694 | 172789 | 1.97 |
| முல்லைத்தீவு | 73886 | 92228 | 0.71 |

Source:http://www.statistics.gov.lk/PopHouSat/CPH2011/Pages/sm/CPH%202011_R1.pdf - Accessed on 09.01.2019

ஆண்டுதோறும் பல்கலைக்கழகத்திற்கு அனுமதிக்கப்படுகின்ற எண்ணிக்கை அதிகரிக்கப்படுகின்ற நிலையில் காணப்படுகின்றது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அறிக்கைப்படி பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்பட்ட மாணவர் விபரம் வருமாறு.

| கல்வியாண்டு | மாணவர் தொகை |
|---|---|
| 2014/2015 | 25676 |
| 2015/2016 | 29083 |
| 2016/2017 | 30668 |

Source: http://www.ugc.ac.lk/downloads/statistics/stat_2017/Chapter%202.pdf - Accessed on 14.01.2019

பல்கலைக்கழக அனுமதியினைப் பெற்ற மாணவர் தொடர்பான புள்ளிவிபரத்தின்

படி 2017ம் ஆண்டில் வடக்கு மாகாண மாணவர்களில் பல்கலைக்கழக அனுமதியினைப் பெற்ற வீதம் அகில இலங்கை ரீதியாக முதல் நிலையில் காணப்படுவதுடன் ஏறத்தாழ 15 சதவீதமான மாணவர்கள் வடக்கு மாகாணத்தில் இருந்து பல்கலைக்கழக அனுமதியினை பெறுகின்றனர்.

| 2017ம் ஆண்டில் மாகாண ரீதியாக பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர் எண்ணிக்கை மற்றும் சதவீதம் | | | |
|---|---|---|---|
| மாகாணம் | பரீட்சைக்குத் தோற்றிய மாணவர் எண்ணிக்கை | பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர் எண்ணிக்கை | சதவீதம் |
| வடக்கு மாகாணம் | 13643 | 2039 | 14.95 |
| மேல் மாகாணம் | 65672 | 8248 | 12.56 |
| தென் மாகாணம் | 36474 | 4525 | 12.41 |
| கிழக்க மாகாணம் | 19396 | 2307 | 11.89 |
| சப்ரகமுவ மாகாணம் | 24726 | 2887 | 11.68 |
| வடமேல் மாகாணம் | 28396 | 3142 | 11.06 |
| ஊவா மாகாணம் | 17301 | 1770 | 10.23 |
| மத்திய மாகாணம் | 32151 | 3224 | 10.03 |
| வட மத்திய மாகாணம் | 15571 | 1554 | 9.98 |
| **Source: http://www.ugc.ac.lk/downloads/statistics/stat_2017/Chapter%202.pdf - Accessed on 21.01.2019** | | | |

கடந்த நான்கு ஆண்டுகளில் வடக்கு மாகாணத்தில் இருந்து பல்கலைக்கழகத்துக்கு அனுமதி பெறும் மாணவர்களது எண்ணிக்கை சீரான வகையில் அதிகரித்துச் செல்வதனை அவதானிக்க முடிகின்றது.

| **அண்மைய ஆண்டுகளில் வடக்கு மாகாணத்தில் இருந்து பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர் எண்ணிக்கை** | | | | |
|---|---|---|---|---|
| **மாவட்டம்** | **2014** | **2015** | **2016** | **2017** |
| யாழ்ப்பாணம் | 902 | 950 | 1121 | 1190 |
| கிளிநொச்சி | 165 | 146 | 164 | 209 |
| மன்னார் | 151 | 143 | 171 | 198 |
| முல்லைத்தீவு | 150 | 139 | 157 | 179 |
| வவுனியா | 198 | 211 | 238 | 263 |
| **வடக்கு மாகாணம்** | **1566** | **1589** | **1851** | **2039** |
| **Source: http://www.ugc.ac.lk/downloads/statistics/stat_....../Chapter%202.pdf - Accessed on 21.01.2019** | | | | |

பட்டியற்படுத்தப்பட்ட புள்ளிவிபரங்கள் மற்றும் கல்வியில் தாக்கம் செலுத்தும் காரணிகளையும் தெளிவான அடிப்படைகளின் கீழ் பகுப்பாய்வு செய்கையில், வடக்கு மாகாணத்தினது கல்வி நிலை மற்றும் கல்வித்துறைசார் பெறுபேறுகள்

உட்பட்ட அடைவுகளின் இன்றைய நிலையினை உணர்ந்து கொள்ளக்கூடியதாக உள்ளதுடன் புள்ளிவிபர ரீதியான ஆக்கபூர்வமான விமர்சனங்கள் முன்வைக்கப்படல் ஆரோக்கியமானதாகவே காணப்படும்.

**திருச்செல்வம் ஆயவன்**
உதவிக் கல்விப்பணிப்பாளர்
வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களம்

# 2018 புலமைப்பரிசிலும் வடக்கு மாகாணமும்

2018இல் நடைப்பெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் வடமேல் மாகாணத்திற்கு அடுத்தபடியாக வடமாகணமே வெட்டுப்புள்ளியில் முன்னிலை வகிக்கின்றது. இம்முறை 18595 மாணவர்கள் தோற்றி 2236 மாணவர்கள் வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்றுள்ளனர். இச்சித்தி வீதம் 12.2 ஆகும். கடந்த ஆண்டில் 10.93 வீதமாக இருந்த வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்றோரின் வீதம் இம்முறை 1.09 வீதத்தால் அதிகரித்துள்ளது.

அதே நேரத்தில் இரண்டு வினாத்தாள்களுக்கும் 35 புள்ளிகளின் படி 70 க்கு மேல் எடுத்த மாணவர்களின் சித்தி வீதம் 75.22 வீதமாகும். கடந்த ஆண்டில் 62.52 வீதமாகக் காணப்பட்ட மேற்படி சித்திவீதம் இம்முறை 12.7 வீதத்தால் அதிகரித்துள்ளது. மன்னார் மாவட்டத்தைத் தவிர ஏனைய நான்கு மாவட்டங்களின் சித்தி வீதங்களும் அதிகரித்துள்ளன. வலிகாமம், கிளிநொச்சி, முல்லைத்தீவு கல்வி வலயங்கள் முன்னேறியுள்ளன. பாடசாலைகளின் வரிசையில் யாழ் சென் பொஸ்கோ வித்தியாலயம் தேசிய மட்டத்தில் மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வடமாகாணத்தின் சாதனையாளர் கௌரவிப்பு விழா

வடமாகாணக் கல்விப்புலத்திலே வருடந்தோறும் ஒழுங்கமைக்கப்பட்டு நடாத்தப்படுகின்ற சாதனையாளர் கௌரவிப்பு நிகழ்வானது, 14, 15, 16, 17.12.2018 ஆகிய தினங்களில் யா/ இந்து மகளிர்கல்லூரியில் ஆறு அமர்வுகளாக நடைபெற்றது. மாகாணக் கல்விப்பணிப்பாளர் திரு. செ. உதயகுமார் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில்,

வடக்கு மாகாணத்தின் ஆளுநர் கௌரவ றெஜினோல்ட் கூறே அவர்கள் பிரதம விருந்தினராகவும், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் வைத்திய கலாநிதி திரு. முகுந்தன் அவர்கள் சிறப்பு விருந்தினராகவும், கல்விபண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் முன்னாள் செயலாளரும் தற்போதைய இணைப்புச்செயலாளருமாகிய திரு. சுந்தரம் டிவகலாலா அவர்கள் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொண்டு முதலாம் அமர்வைச் சிறப்பித்தனர்.

இந்நிகழ்விற்கு தலைமை தாங்கிய மாகாணக்கல்விப்பணிப்பாளர், "வடக்கு மாகாண பாடசாலைகளின் கல்லி அடைவுமட்டம் படிப்படியாக முன்னேற்றகரமாகச் செல்வதைக் காண்கின்றோம். தரம் 05 புலமை பரிசில் பரீட்சை பெறுபேறுகளை எடுத்து நோக்கினால் 12.7 % ஆல் அதிகரிக்கப்பட்டுள்ளது. மாணவர்களிடையே தேடல், ஆக்கத்திறன், விரிசிந்தனை, புதியநோக்கு, படைப்பாற்றல் முதலிய ஆளுமைப் பண்புகள் விருத்தியடைந்துள்ளது. அறிவு, திறன், மனப்பாங்கு முதலியவற்றோடு தேர்ச்சி மிக்க சமுதாய உருவாக்கத்திற்கும் வித்திடுகின்ற இணைப்பாட விதான செயற்பாடுகளில் ஏனைய மாகாணங்களோடு ஒப்பிடுகின்றபோது எமது மாகாணம் அதிக பதக்கங்களைப் பெற்று வளர்ந்திருப்பது நோக்கத்தக்கது. இதற்காக பாடசாலை மட்டம் தொடக்கம் தேசியமட்டம் வரைக்கும் ஆளுமை மிகுந்த இளஞ்சந்ததியினரை உருவாக்குவதற்காக உழைத்துக் கொண்டிருக்கின்ற ஆசிரியர்கள் மற்றும் அவர்களை வழிப்படுத்திக் கொண்டிருக்கின்ற அதிபர்களைக் கௌரவிக்க வேண்டிய தேவை இருக்கின்றது. எனவே கல்விப்புலம் சார்ந்த அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவதன் மூலமே வடக்குமாகாணத்தின் கல்வித்தரத்தை மேலும் முன்னிலைக்குக் கொண்டு வர முடியும்." என்று தமதுரையில் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் தரம் - 05 புலமைப் பரிசில் பரீட்சையில் 100 புள்ளிகளுக்கு மேல் 85% வீதத்திற்கு மேற்பட்ட பிள்ளைகளை சித்தியடைய வைத்த பாடசாலைகளின் அதிபர்கள், தரம்-05 இல் கற்பித்த ஆசிரியர்கள், நல்லாசிரியர் விருது பெறுவோர், பாடசாலைகளின் பண்புத்தரச்சுட்டி அடிப்படையில் ஒவ்வொரு வகையிலும்கூடிய புள்ளிகளைப் பெற்ற பாடசாலைகள், 2017-2018 இல் சுகாதாரத்துறையில் வெற்றியீட்டியோர் என 658 அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

இங்கு கௌரவ ஆளுநர் அவர்கள் உரையாற்றுகையில், "கல்வியின்நோக்கம் நிறைவேற வேண்டுமாயின் ஆசிரியர்களும் பெற்றோர்களும் மாணவர்களும் ஒன்றாக இணைய வேண்டும். முப்பது வருடங்களாக அனுபவித்த துன்பங்களில் இருந்து மீண்டு, அதற்கு முந்திய காலத்தில் பெற்றுக்கொண்ட கௌரவத்தைப் பெற வேண்டுமானால் ஆசிரியர்கள் அர்ப்பணிப்புடன் சேவையாற்ற முன்வர வேண்டும். வேறு தொழிற்துறையைச் சேர்ந்தவர்களை விடவும் ஆசிரியர்களே தெய்வத்திற்குச் சமமாக மதிக்கப்படுகிறார்கள் என்றால் அதற்குரிய பெறுமானத்தை அவர்கள் உணர வேண்டும். ஆசிரியர் என்ற பெயருக்கேற்ற வகையில் செயலாற்றுவதுடன், எமது பிரதேசத்திற்கு சேவையாற்ற வேண்டும் என்னும் இதய பூர்வமான சிந்தனை ஒவ்வொருவர் உள்ளத்திலும் மலர வேண்டும்." எனக் கேட்டுக் கொண்டார்.

வைத்திய கலாநிதி. திரு.முகுந்தன் அவர்கள் தமதுரையில், "அரம் போலும் கூர்மையரேனும் மரம் போல்வர் மக்கட் பண்பி ல்லாதவர்" என்ற குறளுக்கமைய கல்வியானது நடத்தை உருவாக்கத்துடன் மனிதநேயத்தையும் சமதாய மேம் பாட்டிற்காகப் பாடுபடுகின்ற நல் மனப்பாங்கினையும் மாணவர்களிடையே வளர்க்க உதவ வேண்டும். பாடசாலைகளில் செலவிடுகின்றஒவ்வொருமணித்துளிகளும் பொன்னானவை. இன்றைய நவீன மயமாக்கல் சூழலில் உலகைப் பற்றியும், உலகில் நடைபெறுகின்ற விடயங்களைப் பற்றியும் இலகுவாக அறிந்து கொள்ள முடிகிறது. அதற்காக பொருத்தமான வகையில் ஊடகங்களைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். மேலைத்தேச நாடுகளில் மாணவர்கள் பல்வேறு திறன்களைவளர்த்துக்கொள்வதில் ஆர்வம் கொண்டிருப்பதைப் போன்று எமது மாணவர்களும் எண்ணக்கருக்களைத் தூய்மைப்படுத்தி ஆற்றலை வளர்த்துக் கொள்ள முயல வேண்டும். கிடைக்கின்ற சந்தர்ப்பங்களை உரிய வகையில் பயன்படுத்திக் கொண்டு முன்னேற்றப் பாதையில் செல்ல வேண்டிய காலகட்டமிது" என கருத்தினைப் பதிவு செய்தார்.

தொடர்ந்து இரண்டாம் நாள் அமர்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பட்டப்படிப்புகள் பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் திரு.கு. மிகுந்தன் அவர்கள் பிரதம விருந்தினராகவும், மாகாணக்கல்வித்திணைக்களத்தின் முன்னாள் கல்விப்பணிப்பாளர் திரு. p.விக்கினேஸ்வரன் அவர்கள் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இதன்போது ஆரம்பக்கல்வி, விஞ்ஞானத்துறை, தமிழ்த்துறை சார்ந்த போட்டிகளில் வெற்றியீட்டிய 845 மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

மூன்றாம் நாளின் முதலாம் அமர்வில் வடக்குமாகாண ஆளுநரின் செயலாளர் திரு.I. இளங்கோவன் அவர்கள் பிரதம விருந்தினராகவும், வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் பிரதம கணக்காளர் திரு. N.S.R. சிவரூபன் அவர்கள் சிறப்பு விருந்தினராகவும், மாகாணக்கல்வித் திணைக்களத்தின் முன்னாள் கல்விப் பணிப்பாளர் திரு.V. செல்வராசா அவர்கள் கௌரவ விருந்தினராகவும் கலந்து சிறப்பித்தனர். இதன்போது, விவசாயம், மனைப்பொருளியல் மற்றும் அழகியற்துறை சார்ந்த போட்டிகளில் வெற்றிபெற்ற 845 மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

இரண்டாவது அமர்வில் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் திரு.சி. சத்திய சீலன் அவர்கள் பிரதம விருந்தினராகவும் வடக்கு மாகாணச் சுகாதாரத்திணைக்களப் பதிவாளர் திரு. இராஜேந்திரன் அவர்கள் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இந் நிகழ்வில் 2017ஆம் ஆண்டின் க. பொ. த உ/தரத்தில் சிறந்த பெறுபேற்றைப் பெற்ற 750 மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

நான்காம் நாள் முதலாம் அமர்வில் மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழுவின் பிரதிப் பிரதம செயலாளர் திரு. A. சிவபாலசுந்தரன் அவர்கள் பிரதம விருந்தினராகவும் வடக்கு மாகாணத்தின் பிரதிப் பிரதம செயலாளர் (பொறியியல்) திரு.S. சண்முகானந்தன் அவர்கள் சிறப்பு விருந்தினராகவும், மாகாணக் கல்வித்திணைக்களத்தின் முன்னாள் கல்விப்பணிப்பாளர் திரு. இராசையா அவர்கள் கௌரவ விருந்தினராகவும் கலந்து சிறப்பித்தனர். இதன் போது வர்த்தகம், சமூக விஞ்ஞானம், நூலகம் மற்றும் ஆங்கிலம் ஆகிய துறைகளில் வெற்றி பெற்ற 753 மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

இந் நாளின் இரண்டாவது அமர்வில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் திரு. சத்தியமூர்த்தி அவர்கள் பிரதம விருந்தினராகவும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தின் பேராசிரியர் J.P. ஜெயதேவன் அவர்கள் சிறப்பு விருந்தினராகவும். மாகாணக் கல்வித்திணைக்களத்தின் முன்னாள் மேலதிக மாகாணக்கல்விப்பணிப்பாளர் திருமதி. செல்வின் இரேனியஸ் அவர்கள் கௌரவ விருந்தினராகவும் கலந்து சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில் அகில இலங்கை கணிதப் போட்டி, கணித ஒலிம்பியாட், சிங்களமொழி மூலமான சமூக விஞ்ஞானம், இரண்டாம் மொழி (தமிழ்) மற்றும் இரண்டாம் மொழி சிங்களம் ஆகிய துறைகளில் வெற்றியீட்டிய 922 மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

மேற்படி போட்டிகளில் பங்குபற்றிய மாணவர்களுக்கான சான்றிதழ்களும் பதக்கங்களும் வழங்கப்பட்டதுடன். அதிபர் ஆசிரியர்களுக்கான கௌரவிப் புக்களும் வழங்கப்பட்டமை குறிப்பிடத் தக்கது.

# புதிய கல்விச் சிந்தனைகளும் உலக நாடுகளின் இன்றைய கல்வியும்


அபிவிருத்தியடைந்துள்ள மேலைநாடுகள் கடைப்பிடிக்கும் கல்விக் கொள்கைகள் எப்போதுமே வளர்முக நாடுகளின் கல்வி முறைகளைப் பாதித்து வந்துள்ளன. வளர்முக நாடுகள் தமது உள்ளூர் நிலைமைகளுக்கேற்ற கல்விக் கொள்கைகளை வகுக்கும்போதும் மேல்நாட்டுக் கல்விச்சிந்தனை பற்றி அறிந்து, அவ்வனுபவங்களைப் பயன்படுத்த முனைவதில் தவறவில்லை. இந் நிலையில் இன்று மேலை நாடுகளில் பின்பற்றப்படும் கல்விக் கொள்கைகள் பற்றிய விளக்கம் பயன்தருமென்பதில் ஐயமில்லை.


மேலைநாடுகளின் இன்றைய கல்வித் துறை மாற்றங்கள் பொருளாதார மேம்பாட்டையே பெரிதும் கருத்திற் கொண்டமைகின்றன. பொருளாதாரத் துறையில் பிறநாடுகளுடன் போட்டியிட வேண்டிய ஒரு கட்டாய நிலைமை காரணமாக, ஊழியர் தொகுதியினரை (Workforce) விசேட பயிற்சிக்குட்படுத்துவது முக்கியத்துவம் பெற்றுள்ளது. தொழில்நுட்ப மாற்றங்கள் புதிய வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்துகின்றன. பொருளாதாரமுறையில் பல அமைப்பு ரீதியான மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன. இவற்றுக்கு ஈடுகொடுக்கும் முறையில் ஊழியர் தொகுதியினர் நன்கு பயிற்சி பெற வேண்டியுள்ளது. இந் நோக்கினை அடைய, கல்வி முறைகள் மறுபரிசீலனைக்கு உட்பட வேண்டும் என மேலை நாடுகள் கருதுகின்றன. தனியாளின் விருத்தி, அவனுடைய சமூக அந்தஸ்தை உயர்த்துதல் போன்ற நோக்குகள் முற்றாகக் கைவிடப்படவில்லை என்றாலும் கல்வியின் பொருளாதார நோக்குக்கே கூடிய முக்கியத்துவம் வழங்கப்படுகின்றது.


இரண்டாவதாக, பாடசாலைகள் பற்றிய விரிவான கண்டனங்கள் எழுந்துள்ளமை பற்றி சிந்திக்கப்படுகின்றது. கல்விச் செலவுகள் உயர்ந்து வருகின்றன. ஆனால் அதற்கேற்ப கல்வி முறைகள் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றவில்லை என்பதையே பல்வேறு கல்வி அறிக்கைகள் சுட்டிக் காட்டுகின்றன. கல்விச் சீர்திருத்தங்களைத் தூண்டும் சக்தியாக விளங்குவது பாடசாலைகள் பற்றிய கண்டனமேயாகும். பாடசாலைகள் சிறப்பாக செயற்பட்டால் சீர்திருத்தங்களுக்கு அவசியமில்லை என்பது உண்மையே. ஆயினும் மேலை நாடுகளில் இக் கண்டனங்களை விடுப்பது பெற்றோர்கள் அல்ல. வர்த்தக, தொழில்துறை நிர்வாகிகளே இக் கண்டனங்களை விடுப்பதில் முன்னிற்பதாக ஆய்வுகள் கூறுகின்றன. கனடா, ஐக்கிய அமெரிக்கா, பிரிட்டன் முதலிய நாடுகளில் இந்நிர்வாகிகள் தவிர்ந்த ஏனையோர் தற்போதைய கல்வி முறையின் மீது நம்பிக்கையையே தெரிவிக்கின்றனர். அவர்கள் பெரிய அளவில் கல்விச்சீர்திருத்தங்களைக் கோருவதில்லை. ஐக்கிய அமெரிக்க, கனேடிய பெற்றோர்கள், பாடசாலைகள் சிறப்பாகப் பணியாற்றுவதாகவே கருதுகின்றனர். என ஆய்வுகள் கூறுகின்றன.


தொடரும்

# மாகாணக் கல்வித் திணைக்கள ஆக்கங்கள்






**மாகாணக் கல்வித் திணைக்களம்**
**வடக்கு மாகாணம்**